தமிழ்நாடு சட்ட பேரவை

வெள்ளிக் கிழமை, 1973 பிப்ரவரி 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

கோவில்பட்டி, விளாத்திகுளம் பகுதிகளில் அரிசி வழங்கல்

* 1—குறுகிய கால வினா. திரு சோ. அழகர் சாமி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு, லெவி கொள்முதலை அறிவித்து, செக்போஸ்டுகளை ஏற்படுத்தியுள்ளதன் காரணமாக நெல்லை மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி, விளாத்திகுளம் முதலிய பற்றுக் குறைப் பிரதேசங்களில் அரிசி வரத்து நின்று அதன் காரணமாக அரிசி விலை உயர்வு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(இ) அரிசி வரத்துக்கும், நியாய விலையில் அரிசி கிடைப்பதற்கும் அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு மன்னை. ப நாராயணசாமி : (அ) நெல்லை மாவட்டத்தில் லெவி கொள்முதல் அமுலுக்கு வந்ததன் காரணமாக கோவில்பட்டி, விளாத்திகுளம் முதலிய பகுதிகளில் அரிசிப் பற்றுக்குறையோ பெருமளவில் விலை உயர்வோ ஏற்படவில்லை.

(இ) நெல்லை மாவட்டத்தில் அறுவடை துவங்கும்வரை பற்றுக்குறை பகுதிகளுக்குத் தேவையான அளவு அரிசி தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது.

திரு சோ. அழகர்சாமி : இந்த ஆண்டு லெவி கொள்முதல் அறிவிக்கப்படும்போது, சைதாப்பேட்டை, தென்னார்க்காடு, திருச்சி, தஞ்சை, கோவை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும், மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம், பெரியகுளம் தாலுக்காக்களில் மட்டும் தான் அறிவிக்கப்பட்டுள்ளது. நெல்லை, கோவை மாவட்டங்களில் சென்ற ஆண்டு ஒருசில தாலுக்காக்களில் மட்டும்தான் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், கோவில்பட்டி, விளாத்திகுளம் எப்போழுதுமே மிக வறட்சியான பற்றுக்குறை பகுதிகள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், அந்த இடங்களில் சோதனைச் சாவடிகள் மூலமாகப் மதுரையிலிருந்து தினமொன்றுக்கு 500 குவிண்டால் அரிசி வந்துகொண்டிருந்தது. லெவி அறிவித்தற்குப் பின்னர் அது தடுக்கப்பட்டு அந்த அரிசி வர முடியாத நிலை

ஏற்பட்ட காரணத்தால், இருபது ரூபாய்க்கு அதிகமாக விலை உயர்ந்திருக்கிறது என்று அமைச்சருக்கும் ஏனைய சம்பந்தப்பட்டவர்களுக்கும் அங்குள்ளவர்கள் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள், வேறு எங்கிருந்தும் அரிசி வர முடியாமல் தடுத்து விடுவதால் அரிசியின் விலை ஏறிவிடுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : ஆகவே அங்கு பழையபடி அரிசி கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா? அல்லது, மற்ற இடங்களில் கொள்முதல் செய்து அந்த வட்டாரங்களுக்கு வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : சென்ற முறை லெவி போட்டபோது சிற்சில மாவட்டங்களில் சிற்சில தாலுக்காக்களில் மட்டும் போடப்பட்டிருந்தது. இப்போது கோவை பூராவுக்கும் போடப்பட்டிருக்கிறது. முன்பு திருநெல்வேலியில் சில பகுதிகளில் போடப்பட்டிருந்தது. இப்பொழுது திருநெல்வேலி பூராவும் போடப்பட்டிருக்கிறது. அது போன்று எல்லா மாவட்டங்களிலும் இப்படி ஏன் போடப்பட்டிருக்கிறது என்றால், கள்ளக் கடத்தல் அதிகமாக இருப்பதுதான், கேரளத்தில் மற்றப் பகுதிகளுக்கும் அரிசி போய்க்கொண்டிருக்கிற காரணத்தால் பூராவுக்கும் போடப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த கோவில்பட்டி பகுதியில் லெவி போட்டவுடனே கொஞ்சம் விலை உயர்ந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது விலை குறைந்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. ஆகவே, நெல்லை மாவட்டத்தில் அறுவடையாகும் வரை இப்பொழுது தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலிருந்து அரிசி கொண்டு போய் இவர்கள் சொல்கிற தாலுக்காக்களில் அந்தப் பகுதிகளுக்கு மட்டும் நேரடியாக வினியோகம் பண்ணுவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்

திரு. கே. டி. கே. தங்கமணி : 8–2–1973 முதல் தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல்லை மாவட்டம் போன்ற மாவட்டங்களுக்கும், சேலம், திருச்சி தவிர மற்ற மாவட்டங்கள் பூராவுக்கும் லெவிக்கு மேற்பட்டிருக்கும் நெல்லை ஏற்றுமதி பண்ணக்கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அப்படிப் போடப்பட்டிருக்கிற அந்த உத்தரவு ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : உத்தரவு போடப்பட்டிருக்கிறது. சேலம், இராமநாதபுரம் மாவட்டங்களில் லெவி போடாத காரணத்தால், பற்றுக்குறை மாவட்டங்களாக இதுவரையில் இருக்கிற காரணத்தால் அந்த மாவட்டங்களுக்கு மட்டும் அனுப்பும்படி போடப்பட்டிருக்கிறது. அங்கே உற்பத்தியாகிற நெல் அந்தந்த மாவட்டத்திற்குத் தேவையாக இருக்கிறது என்று காரணம் காட்டி மற்ற மாவட்டங்களுக்கு அனுப்பவேண்டாம் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த லெவி முறையைக் கைவிட்டுவிட்டு, அரசே ஹோல்ஸேல் ட்ரேடை எடுத்துக் கொள்ள உத்தேசம் உண்டா? அப்படியிருந்தால், அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? மத்திய அரசாங்கத்தினிடமிருந்து நமக்கு ஏதாவது பரிந்துரை வந்திருக்கிறதா?

1973 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து மொத்தக் கொள்முதல் செய்வதைப்பற்றி இப்பொழுது யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை எப்படிச் செய்வது என்கிற முறைகளைத் தீர்மானிப்பதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசே செய்து கொண்டிருக்கிறார்கள். எப்படிக் கொள்முதல் செய்வது என்பது பற்றிய ஆராய்ச்சிகளையும் மாநில அரசும் ஆலோசித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : லெவி கொள்முதல் விலை 58 கிலோ 30 ரூபாய்க்கு கம்மியாக இருக்கும்போது பாக்கி இருக்கக்கூடிய மூட்டைகளை திருநெல்வேலி மாவட்டம் உட்பட பற்றாக்குறைப் பகுதிகளுக்கு அனுப்பலாம் அல்லவா? திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்காவது இந்த ஏற்றுமதித் தடை ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : கன்னியாகுமரி மாவட்டத்தில் விளைகிற நெல் கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் போதுமான அளவுக்கு இருக்கிறது என்பதோடு, சர்ப்ளஸாகவும் நெல் உள்ளது என்று நேற்று பதில் சொன்னேன். அந்த மாவட்ட நெல் பக்கத்திலுள்ள கேரளாவிற்குப் போகின்ற காரணத்தால் அதைத் தடை செய்வதற்கு எப்படி எப்படியோ பல முறைகளைக் கடைப்பிடித்தும், பயன்படாததால், இந்த முறையை எடுத்துப் பார்ப்போம் என்று இப்பொழுது இந்த முயற்சி செய்திருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் போன்ற தாம்பிரபரணிப் பாசனப் பகுதிகளில் இந்த வருஷம் நல்ல முறையில் விளைவு இருக்கிறது. நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே விளையும் நெல் போதுமானதாக இருப்பதால் மாவட்டம் பூராவும் லெவி போட்டிருக்கிறோம். அறுவடை ஆகும் காலம் வரையில் கோவில்பட்டி முதலிய பகுதிகளுக்கும் உடனடியாக அனுப்ப நாங்கள் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

THIRU B. VENKATASWAMY : Sir, there are some villages between the check-posts and the border—about five miles from the border. The people there are finding it difficult to take their foodgrains to their places. So may I know from the Hon. Minister whether the check-posts will be shifted to the State border or they will be issued ration cards ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இப்பொழுது சவுக்கை இருக்கிற இடங்களில் கூடியவரையில் அவர்களை எந்த அளவுக்குக் கண்டு பிடிக்க முடியுமோ அந்த அளவுக்குக் கண்டுபிடிக்கிறார்கள். இதைத் தள்ளிக்கொண்டு போவது என்று சொன்னால் சரியான கண்காணிப்பு செய்ய முடியாது. இடைவெளி விடாமல் அந்தப் பகுதிகளில் வைத்தால் இவர்களைப் பிடிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று இப்பொழுது பார்டரில் வைத்திருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : கோவில்பட்டி, விளாத்திகுளம் போன்ற இடங்களிலும், கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டங்களில் செக் போஸ்டுகளை மெயின் ரோடுகளில் வைத்திருக்கும் காரணத்தினால், அந்த ரோடு வழியாக வருகிற வண்டிகளை மட்டும்தான் தடுக்க முடிகிறது. மற்றபடி வேறு வழிகளில் குறுகிய சாலைகளில் கொண்டுபோவதைப்

பிடிக்க வழியில்லை. நெல்லைக் கொண்டு போவதைத் தடுப்பதற்கு பலத்த பாதுகாப்புச் செய்வதற்கு எல்லா இடங்களிலும் செக்போஸ்டுகளை ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : ரோடுகளில் தான் செக்போஸ்டுகளை வைக்க முடியும். மற்ற வழிகளில் எப்படிக் கொண்டு போகிறார்களோ அதே மாதிரி அதைப் பிடிப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிகாரிகளும் அந்த வழிகளில் நடந்துபோய் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள். இருந்தாலும், பொது மக்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் தேவைப்படுகிறது. அப்படி அகப்பட்டுக் கொள்கிறவர்கள் பொருள்களைப் போட்டுவிட்டு ஓடிவிடுகிறார்கள். அந்த பிராபர்டிக்கு யார் ஜவாப்தாரி என்று தெரியாத நிலைகூட ஏற்பட்டுவிடுகிறது. அப்படிக் கண்டு பிடிப்பதையும் துரிதப்படுத்த வேண்டும். எந்த அளவில் அதிகமாகப் பிடிக்க முடியுமோ அந்த அளவுக்குப் பிடிக்க வேண்டும். நான் மூன்று தினங்களுக்கு முன்பு திருச்செந்தூர் கூட்டத்தில்கூட அங்கே இருக்கிற அதிகாரிகளைக் கலந்து பேசி சில முறைகளை ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : லெவி கொள்முதல் சில மாவட்டங்களில் மட்டும் செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதே, அது எந்த அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது? உபரி மாவட்டங்களில் லெவி கொள்முதல் செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதா நெல்லை விளையாத மாவட்டங்களில் லெவி இல்லை என்று விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உபரி மாவட்டங்களில் எங்கே அதிகமான அளவு பரம்பரையாகக் கொள்முதல் செய்தார்களோ அந்த மாவட்டங்களில் கொள்முதல் செய்கிறார்கள். சில மாவட்டங்களில் விளைகிற நெல் அந்த மாவட்டத்தில் கொள்முதல் செய்யவேண்டியதில்லை, அங்கு இருக்கிற அரிசியை அங்கு இருக்கிற வியாபாரிகள் பற்றாக்குறை இருக்கிற இடங்களில் அங்கேயே நிரவிக்கொள்ளலாம். அதனால்தான் அங்கே கொள்முதல் வைப்பதில்லை. தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் அவசியம், எவ்வளவு விரும்புகிறோமோ அந்த அளவுக்கு வழக்கமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. அந்த முறைப்படி அங்கேமட்டும் கொள்முதல் வைத்திருக்கிறோம்.

Recruitment of Police Constables.

*81 *Q.* THIRU K. T. K. THANGAMANI,
THIRU N.DENNIS:

Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) Whether it is a fact that the S.S.L.C. qualified persons have been recruited as Police constables; and

(*b*) If so, the number of them employed, district-wis ?